**தலைப்பு 04- மேல்நீதிமன்ற நீதிபதிகள்**

…………………………………………….

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------

### 1.1 முணைப்பழியுள்ள அபிப்பிராயம்

…………………………………….

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானநிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 02 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முணைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

………………………………………………………….

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முணைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

……………………………………………………………………………………………

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல்ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன.என்னால் மேலும்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அளப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொறுண்மையான பிரழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிரழ்கூற்றுக்கினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும்

தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டினைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்ட.

எனது கணக்காய்வில் இனங்காணபபட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

……………………………………………………………………

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகிறது எனவும் ,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன எனவும் .

1.6 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**..............................................................................**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**.....................................................**

**(அ) ஆதனம், பொறி , உபகரணங்கள் என்பன**

……………………………………………………

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ………………………………… | ……………………………….. | ……………. |
| திறைசேரியின் கணக்குகள் கற்று SA -82 இல் நிதியற்ற சொத்துக்களின் மீதி காட்டப்படாதிருந்த போதிலும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம் பொறி உபகரணங்கள் மற்றும்அதன் ஒதுக்கமாக ரூபா 609,890,813 காட்டப்பட்டிருந்தது அது நிறுவனத்தின் சிகாஸ்களில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் அறிக்கையின் பெறுமதியாகும். அதற்கிணங்க 2021 நவம்பர் 26 ஆந் திகதி 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள தரவுகள் திறைசேரியின் இறுதிக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தரவுகளுடன் இணங்கியுள்ளது என சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் கூற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவை இலக்கம் 02 இல் குறிப்பிட்டவாறு திறைசேரியின்மாதாந்த கணக்குக் கூற்றுடன் உரிய நிறுவனத்தின் கணக்குகள் | 2021-12-31 இல் உள்ளவாறு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி திறைசேரியின் சொத்துக்கள் மீதியுடன் ஓப்பீடு செய்யப்பட்டது. எனினும் தொழிநுட்ப தவறுகளின் காரணமாக திறைசேரியின் கணக்கு கூற்று (SA-82) அறிக்கையினை 2021 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளமுடியாதிருந்தது. அப்பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு 2022- 04-26 ஆந் திகதி திறைசேரியின் கணக்குகள் கூற்று (SA-82) பெற்றுக்கொள்ளப்பட்டது. | 2020 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவை இலக்கம் 02 மற்றும் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

முறைப்படியாக ஒப்பீடுசெய்யப்பட்டிருக்காததுடன் காணப்படுகின்ற வித்தியாசங்களை அடுத்து வரும் மாதத்தின் மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 ஏடுகள் முறையாக பேணப்படாமை

............................................................

பின்வரும் ஏடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படவில்லை என தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | …………..…………… | ………………………….. | …………………….. |
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான ஏடுகள் | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 947,954 தொகையான பொறுப்புக்களானது பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததும் அப்பொறுப்புக்களைத் தீர்த்துவைத்தல் சம்பந்தமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களைத் தீர்த்துவைத்தல் சம்பந்தமான தகவல்களை பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்கக்கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக்கானப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு | | |
| பேணப்படுகின்ற முற்பணக்கட்டுப்பாட்டுக் கணக்கை முறைப்படியாக எழுதி மாதாந்தம் திறைசேரி ஏடுகளுடன் திணைக்கள ஏடுகள் ஒப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,022,301 தொகையான மீதி சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்குகளை முறைப்படியாக மாதாந்தம் கணக்கிணக்கம் செய்ய முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அது முறைப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு முறைப்படியாக எழுதப்பட்டு மீதி காணப்படவேண்டியதுடன் மாதாந்தம் திறைசேரி ஏடுகளுடன் திணைக்கள ஏடுகள் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

............................

**2.1 செலவு முகாமைத்துவம்**

....................................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ........................................................ | . ........................................................ | ............... |
| (அ) 5 செலவு விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 13,300,000 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 7,400,000 நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த ரூபா 20,700,000 நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 04-01-01-1102 மற்றும் 04-01-02-1102 ஆகிய செலவு விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ரூபா 10,000,000 வீதம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் ரூபா 4,500,000 வீதமே நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ஏனைய செலவு விடயங்களுக்கும் நிதி ஏற்பாடு போதியளவு இல்லாததனால் குறைநிரப்பு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 -08-28 ஆந் திகதிய ”அரசாங்க செலவுகளின் மீளாய்வு ” தொடர்பான எண்ணக்கருவிற்கு இணங்க இச்செலவு விடயங்களுக்கான நிதியேற்பாடு கட்டுப்படுத்தப்பட்டு அத் தகவல் திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்ப்டுவதனால் முன்னரே தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 02 செலவுவிடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 600,000 தொகையான மதிப்பீட்டு நிதியேற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021-08-28 ஆந் திகதிய ”அரசாங்க செலவுகளின் மீளாய்வு” தொடர்பான எண்ணக்கருவிற்கு இணங்க இச்செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவதனால் முன்னரே தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு போதியவையாக இல்லாததன் காரணமாக குறைநிரப்பின் மூலம் 02 செலவு விடயங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 5,750,000 நியேற்பாட்டிலிருந்து நிதிப்பிரமானம் 66 இன் மூலம் ரூபா 767,000 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டது. | எதிர்காலத்தில் இதுதொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதியேற்பாட்டின் தேவைப்பாடு முறைப்படியாக இனங்காணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 06 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் 44 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது | ஏற்றுக்கொள்கிறேன் கொவிட்-19 தொற்றுநோயின் அடிப்படையில் அலுவலக நடவடிக்கைகள் முறைப்படியாக இடம் பெறாமையினாலும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் போன்ற விடயங்கள் இடம்பெற்றதனாலும் எதிர்பாராத வகையில் செலவுகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவதனால் முன்னரே தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை உரியகாலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்**

**…………………………………………………………………..**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் கூற்றில் (குறிப்பு iv) காட்டப்பட்டுள்ள ரூபா 347,727 கூட்டு மொத்தமான 03 பொறுப்பு மீதிகள் திறைசேறி கணக்கு கூற்று SA-92 இற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் தொழிநுட்ப தவறுகளின் காரணமாக திறைசேரி கணக்கு கூற்று SA-92 அறிக்கையின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்கான தரவுகள் தோற்றம் பெற்றுள்ளன. | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக்கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தரவுகள் திறைசேரியின் இறுதிக் கணக்கு கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணங்கியுள்ளன என்று உறுதிப்படுத்தல் வேண்டும் |
| (ஆ) | உத்தியோகபூர்வ வாகனங்களை திருத்தம் செய்வதற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 125,000 தொகை பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் (குறிப்பு-111) உள்ளடக்குவதற்குப் பதிலாக நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3 ) இன்பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு- iv) உள்ளடக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய ரூபா 125,000 தொடர்பான வவுச்சர்கள் சனவரி மாதத்தில் கிடைத்திருந்ததனால் தவறுதலாக குறிப்பு iv இற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது | தகவல்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

……………………………………………………………………………………

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

……………………

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ------------------------- | ------------- | ---------------------------- | ------------------------- | ------------------ |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை | ரூபா | | | |
| i | நிதிப்பிரமாணம் 104 | 6,348,644 | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு (ii) இன் கீழ் காட்டப்பட்டுள்ள 06 வாகன விபத்துக்களின் நட்டம் சம்பந்தமாக நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நி.பி 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு 2022 ஆம் ஆண்டிலிருந்து முயற்சி எடுக்கப்பட்டுள்ளது | நிதிபிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii | நிதிப்பிரமாணம் 365(3) | 1,987,200 | கட்டுநிதிக்குரிய பணம் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிதி ஆண்டிற்குப் புறம்பான நிதி ஆண்டின் கொடுப்பனவுகளைத் தீர்த்து வைப்பதற்காக ஈடுபடுத்தலாகாது எனக் காட்டப்பட்டிருந்தும் 2022 சனவரி மாதத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் படியானது 429 ஆம் இலக்க வவுச்சரின் மூலம் 2021 திசெம்பர் 30 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | எரிபொருள் படியை ஆண்டிற்காக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iii | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | 173,600 | விசேட செயற்பாடுகளுக்காக வழங்கப்படுகின்ற உபகட்டு நிதி அச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 29 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணங்கள் வழங்கி 02 மாதங்கள் 15 நாட்களிலிருந்து 11 மாதங்கள் வரையான காலப்பகுதி எடுத்திருந்தும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளப் பட்ட கட்டு நிதி செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரணத்தின்பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv | நிதிப்பிரமாணம் 1645(அ) | 1,739,378 | ,வாகனங்களுக்கு சேவை செய்தல்,ரூபா 12 மில்லியனை மிகைத்த வாகன திருத்த செலவுகள் மற்றும் 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரை 12 வாகனங்களுக்கு டயர் மாற்றுவதற்கான செலவுகள் சம்பவக் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அவை நாளது வரையாக்கி பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016. திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | | உத்தியோக பூர்வ வாகனங்களுக்காக சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்துச் சேவை குறிப்பு ஒவ்வொரு மாதத்தின் கடமைகளுக்காக பூரணப்படுத்தப்பட்டிருக்க வில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு போக்குவரத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| i | 3.1 ஆம் பிரிவு | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சிகாஸ் டெக்ஸடொப் உள்ளீட்டின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட பரீட்சை மீதியானது பின்னிணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து வரும் ஆண்டின் போது முறையாக பரீட்சை மீதியினை இணைத்து சமர்ப்பிப்பேன் | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii | 3.4 ஆம் பிரிவு | ஒவ்வொரு செலவு விடய குறியீட்டின் கீழ் அனைத்து செலவு விடயத்திற்காகவும் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுக்குமிடையேயான வித்தியாசமும் அந்த வித்தியாசத்திற்கான காரணமும் ஏசீஏ-2(ii) படிவத்தில் காணப்பட வேண்டிய போதிலும் இரண்டு செலவ விடயங்களின் சேமிப்புக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒவ்வொரு செலவ விடயத்தின் சேமிப்பிற்கான காரணத்தை காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 3.7 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அனைத்து பெறுமதிகளும் அண்மித்த ரூபாவில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் நிதிநிலை தொடர்பான கூற்றினைத் தயாரிக்கும் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டித்<u>க்க வில்லை</u> | எதிர்காலத்தில் ஒவ்வொரு செலவு விடயத்தின் சேமிப்பிற்கான காரணத்தைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

……………………..

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

………………………………….

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | ………………………… | ………………… |
| (அ) | செலவு தலைப்பு 04 இன் நிதி ஏற்பாட்டின் மூலம் 2021 ஆம் | செலவுத் தலைப்பு இலக்கம் 04 இற்காக | நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் பொருள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,383,680 பெறுமதியான அலுவலக உபகரணங்களும் ரூபா 5,595,188 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களும் செலவுத் தலைப்பு 234 இற்குரிய பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் செலவுத் தலைப்பு 04 இற்காக தனியான பொருள் பதிவேட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | தனியான பொருள் பதிவேட்டுப் புத்தகம் பேணுதல் இடம்பெற்றிருக்காததுடன் எதிர்காலத்தில் இதனை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு பதிவேட்டுப் புத்தகம் வைத்திருக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டின் போது நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனத்தின் உரிமை 2022 மார்ச் மாதம் வரை மேல் நீதிமன்ற நீதிபதிகள் நிறுவனத்திற்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வாகனத்தின் பட்டியலில் இந்த வாகனம் நிறுவனத்திற்குச் சொந்தமானது என காட்டப்பட்டுள்ளது. | உரிய வாகனத்தைப் பெறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 நட்டங்களும் சேதங்களும்**

…………………………………

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………. | …………………………… | …………………… |
| ஒரு வாகனத்திற்கு 2020 நவம்பர் 22 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து சம்பந்தமான ரூபா 180,712 தொகையான நட்டம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு (i) இல் மேலும் அறவீடு செய்ய வேண்டியிருந்த அந்த நட்டத்தின் காலப் பகுப்பாய்வு காட்டப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் அதுகாலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் உரிய தகவல்கள் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் |

**4. நல்லாட்சி**

**--------------------**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………… | …………………….. | ……………………. |
| 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு நிதிப்பிரமாணம் 134 மற்றும்2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தில் உள்ளக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | உயர் நீதி மன்றத்தின் பதிவாளர் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தேற்றுவிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | காட்டப்பட்டுள்ள சட்டவிதிகள் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |